(6 Pages)

**Reg. No. :** ....................................

**Code No. : 30548** **Sub. Code : CSTA 32**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2023

Third Semester

Tamil — Skill Based Subject

நாடகவியல்

(For those who joined in July 2021 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.

1. வயிர் என்பது ———— எவ்வகைக் கருவி?

   (அ) தோல் கருவி (ஆ) துளைக் கருவி

   (இ) நரம்புக் கருவி (ஈ) கஞ்சகக் கருவி

2. ஒரு கையினால் நடித்துக்காட்டும் நடிப்புகள் எத்தனை வகை?

   (அ) 30 (ஆ) 31

   (இ) 32 (ஈ) 33

3. துர்க்கை ஆடிய நாட்டியங்களில் ஒன்று எது?

   (அ) பேடியாடல் (ஆ) கடையம்

   (இ) மரக்காலாடல் (ஈ) குடம்

4. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடும் நாடக மேடையின் நீளம் எவ்வளவு?

   (அ) எட்டுக் கோல் (40 அடி)

   (ஆ) ஏழு கோல் (35 அடி)

   (இ) ஐந்து கோல் (5 அடி)

   (ஈ) ஐந்து கோல் (25 அடி)

5. நாடகக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம் இது ஆகும்?

   (அ) நாள்காசி தலைகோல்

   (ஆ) நாளுதேசி தலைக்கோலி

   (இ) தலைகோல் நாள்காசி

   (ஈ) தலைக்கால் நாள்வேலி

6. அப்பர் வரலாற்றை மையக் கருவாகக் கொண்டு இயற்றப்பட்ட நாடகம் எது?

   (அ) பூம்புலியூர் (ஆ) சீதக்காதி

   (இ) கீசகவிலாசம் (ஈ) சிம்மநாதன்

7. ஒருவரே பல பாத்திரங்களின் கூற்றுக்களைப் பாடிக் காட்டும் தன்மையுடைய நாடகம் எது?

(அ) குறவஞ்சி (ஆ) பள்ளு

(இ) கீர்த்தனை (ஈ) பாகவதமேளா

8. தமிழ்க் கவிதை நாடகம் ———— இதுவாகும்.

(அ) கூட்டுப்பண்ணை (ஆ) மனோன்மணீயம்

(இ) அடிமை (ஈ) மனிதன்

9. சமூக சீர்திருத்த நாடகங்களைப் படைத்தளித்ததால் தமிழ் நாட்டு பெர்னாட்ஷா என்று போற்றப்படுவர் யார்?

(அ) தி.க. சண்முகம் (ஆ) எம்.ஆர். இராதா

(இ) அறிஞர் அண்ணா (ஈ) பி.எஸ். ராமையா

10. பாலமனோகரா நாடக சபா நிறுவப்பட்ட ஆண்டு எது?

(அ) 1940 (ஆ) 1922

(இ) 1950 (ஈ) 1960

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக. வினா (அ) அல்லது (ஆ) விடை தருக.

11. (அ) சங்க இலக்கியத்தில் பொருநர் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தில் நாடக்கலை குறித்து விளக்குக.



12. (அ) சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் குழல் பற்றிய செய்திகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) நாடக மேடை அமைப்பு, மேடை விளக்குகள் - பற்றி விவரி.

13. (அ) முதலாம் இராசராசன் காலத்தில் நாடகக்கலை சிறப்புப் பெற்றிருந்ததை விளக்குக.

(அல்லது)

(ஆ) பள்ளு நாடக நூல்களைப் பற்றி விவரி.

14. (அ) நாடக சந்தர்ப்பங்கள் பற்றி கார்லோகோசி கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) குளுவநாடக வரலாறும் வளர்ச்சியும் குறித்து அறிவன யாவை?

15. (அ) நாடகத்தின் பாத்திரப் படைப்பும் தனிமொழியும் எவ்வாறு அமைய வேண்டும்?

(அல்லது)

(ஆ) சி.என். அண்ணாதுரை நாடகத்துறைக்கு ஆற்றிய பணியினை எழுதுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக. வினா (அ) அல்லது (ஆ) விடை தருக.

16. (அ) சங்க இலக்கியங்களில் பாணர், கோடியர், கூத்தர், விறலியர் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரம் நூலில் குறிப்பிடப்படும் மெய்நடிப்பு, கைநடிப்புப் பற்றி விளக்குக.

17. (அ) அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையால் அறியலாகும் நாட்டிய வகைகள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரம் உணர்த்தும் யாழின் வகைகளை விவரி.

18. (அ) சமயப் பெரியார்களின் திருப்பாடல்களில் காணப்படும் நாடகம் பற்றிய குறிப்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கல்வெட்டுகளின் மூலம் அறியப் பெறும் நாடகக் கலை பற்றிய செய்திகளை எடுத்துரைக்க.



19. (அ) தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நாடகங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வானொலி நாடகத்தின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றி விளக்குக.

20. (அ) நாடகக் கட்டுக்கோப்பின் ஐந்து படிநிலைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சமூக சீர்திருத்த நாடகங்கள் யாவை? விவரி.